Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 31-1-2013 Issued : 31-1-2013

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, அக்டோபர் 29, 2012—தொகுதி 35—எண் 2**

**Monday the 29th October, 2012—Volume 35—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**29–10–2012**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற்குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 41-43 |
| **2. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 43-46 |
| **3. தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்குதல்–முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—** | 46-55 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 46-47 |
| திரு. உ. தனியரசு | 47-48 |
| திரு. ரா. சரத்குமார் | 48-50 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 50-51 |
| திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 51 |
| திரு. ம. கலை அரசு | 52 |
| திரு. சு. குணசேகரன் | 52-54 |
| **4. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்** | 55-56 |
| **5. பேரவைத் துணைத் தலைவருக்குப் பாராட்டுரைகளும், நன்றியுரையும்—** | 56-74 |
| திரு. ச. இராமச்சந்திரன் | 57-58 |
| *திரு. மு.க. ஸ்டாலின் | 58-59 |

பக்கங்கள்

**5. பேரவைத் துணைத் தலைவருக்குப் பாராட்டுரைகளும், நன்றியுரையும்**— *தொடர்ச்சி*

*செல்வி கே. பாலபாரதி* 59-60

*திரு. சு. குணசேகரன்* 60-61

*திரு. எஸ். ஜாண் ஜேக்கப்* 61

*திரு. ம. கலை அரசு* 61-62

*டாக்டர் க. கிருஷ்ணசாமி* 62-63

**திரு. ரா. சரத்குமார்* 63-65

*திரு. உ. தனியரசு* 65

*முனைவர் செ.கு. தமிழரசன்* 66-67

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 67-69

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* 69-71

*மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்* 71-74

**6. அறிவிப்புகள்—**

*(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்* 75

*(ஆ) 30–10–2012 அன்று பேரவைக் கூட்டம் இல்லை* 89

**7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2012–2013, அளித்தல்—** 75-89

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 75-84

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-** 89-93

---

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043–ஐப்பசி 13

## 2012 அக்டோபர் 29, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு"

நீதிநெறி முறைப்படி, நல்லாட்சி நடத்தும் அரசருடைய நாட்டில், பருவ மழையும், குறையாத விளைச்சலும், ஒருசேர நிறைந்திருக்கும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எம். சேட்டு அவர்கள் 16–5–2012 அன்றும், திரு. பா. அப்துல் சமத் அவர்கள் 21–6–2012 அன்றும், திரு. ஓ.பி. இராமன் அவர்கள் 5–7–2012 அன்றும், திரு. மு. அலங்காரம் அவர்கள் 31–7–2012 அன்றும், திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் 25–8–2012 அன்றும், திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்கள் 31–8–2012 அன்றும், திரு. எஸ்.எஸ். பொன்முடி அவர்கள் 2–10–2012 அன்றும் மற்றும் திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் 27–10–2012 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2012 அக்டோபர் 29

திரு. எம். சேட்டு அவர்கள் 1989 முதல் 1991 வரை செங்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்.

திரு. பா. அப்துல் சமத் அவர்கள் 1989 முதல் 1991 வரை வாணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்.

திரு. ஓ.பி. இராமன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை மேலூர் (தெற்கு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார். மேலும், 1969 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

திரு. மு. அலங்காரம் அவர்கள் 1967 முதல் 1971 வரை கடலாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.

திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் 1991 முதல் 1996 வரையிலும், 1996 முதல் 2001 வரையிலும் மற்றும் 2001 முதல் 2006 வரையிலும் மூன்று முறை கோயம்புத்தூர் (கிழக்கு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்கள் 1971 முதல் 1976 வரையிலும் மற்றும் 1989 முதல் 1991 வரையிலும் இரண்டு முறை முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்.

திரு. எஸ்.எஸ். பொன்முடி அவர்கள் 1996 முதல் 2001 வரை பல்லடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும், 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் மூன்று முறை திருநெல்வேலி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்.



2012 அக்டோபர் 29] [பேரவைத் தலைவர்]

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது, குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, போக்குவரத்தை சீர்படுத்துவது, இயற்கை இடர்பாடுகளின்போது மீட்புப் பணிகளை மேற்கொள்வது, விழாக் காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசல்களை முறைப்படுத்துவது என பல்வேறு இன்றியமையாப் பணிகளை தமிழகக் காவல் துறை ஆற்றி வருகிறது.

முற்பகல் 10-05

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த காவல் துறையில் உள்ள மொத்தப் பணியிடங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 629 ஆகும். இது, 635 மக்களுக்கு ஒரு காவல் அலுவலர் என்ற விகிதாச்சாரத்தில் அமைந்துள்ளது. 1-1-2012 நிலவரப்படி, இந்த அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு எதிராக 82 விழுக்காடு காவல் அலுவலர்கள் மட்டுமே பணியில் இருந்து வருகிறார்கள்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 அக்டோபர் 29

காவல் துறையில் நிலவும் இந்தப் பற்றாக்குறையினைச் சீர்செய்யும் வகையில், காலியாக உள்ள 12,208 காவலர் பணியிடங்களை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்புமாறு நான் உத்தரவிட்டேன்.

எனது உத்தரவினையடுத்து, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், காவலர்களுக்கான எழுத்துத் தேர்வை 24–6–2012 அன்று நடத்தியது. இதனைத் தொடர்ந்து, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் உடற்தகுதித் தேர்வினை நடத்திய தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், 12–10–2012 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பட்டியலை வெளியிட்டது. இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 12,162 காவலர்களுக்குத் தற்போது மருத்துவப் பரிசோதனை நடைபெற்று வருகிறது. மருத்துவப் பரிசோதனைக்குப் பின், தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்களுக்கு 7 மாத கால பயிற்சி அளிக்கப்பட்டு, அதன் பின்னரே அவர்கள் பணியில் சேரும் நிலை உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டும், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப தமிழக அரசால் வகுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின்படி 19,096 காவல் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும்; ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான காவலர்கள் ஓய்வு பெறுவதைக் கருத்தில் கொண்டும் பார்க்கும்போது, காவல் துறை ஈடுபடும் பல்வேறு நடவடிக்கைகளில் குறிப்பிட்ட சிலவற்றில் அவர்களுக்குத் துணையாக ஒரு துணைப் படையை உருவாக்குவது அவசியமாகிறது. இவ்வாறு அமைப்பதன்மூலம், சட்டம்–ஒழுங்கு பராமரித்தல், குற்றங்களைக் கட்டுப்படுத்துதல், குற்றப் புலனாய்வு போன்ற பிரதான காவல் பணிகளில் தற்போதுள்ள காவலர்களை முழுமையாக ஈடுபடுத்த இயலும்.

இதற்கு வழி செய்யும் வகையில், “தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை” என்ற ஒரு சிறப்புப் படை தமிழ்நாட்டில் உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சிறப்புப் படைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல்; நீதிமன்றங்களால் வெளியிடப்படும் வருவிப்பு ஆணைகளை சார்வு செய்தல்; கூட்ட நெரிசல்களை ஒழுங்குபடுத்துதல்; இரவு ரோந்து மற்றும் ஓட்டுநர் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.



2012 அக்டோபர் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு விளம்பரம் செய்யப்பட்டு; மாவட்டவாரியாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்மூலம் தேர்வு நடத்தப்படும். பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று 18 வயது முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்கள் இத்தேர்வில் கலந்துகொள்ளத் தகுதியுடையவர் ஆவர். தேர்வில் வெற்றி பெறுபவர்கள் அந்தந்த மாவட்டங்களில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்களாகப் பணி அமர்த்தப்படுவர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்களுக்கு பயிற்சிக் காலத்திலும்; பணிக் காலத்திலும் மாதம் ஒன்றுக்கு மதிப்பூதியமாக 7,500/– ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அவர்கள் காவலர்களுக்கான சிறப்பு அங்காடிகளில் அளிக்கப்படும் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுவர். இதுதவிர, அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் வகுக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி அவர்களுக்கு வழங்கப்படும்.

ஓர் ஆண்டுக் காலம் திருப்திகரமான பணியினை நிறைவு செய்யும் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்கள், காவல் துறையில் காலியாகும் காவலர் பணியிடங்களில் ஈர்த்துக்கொள்ளக்கூடிய தகுதியைப் பெறுவர். ஒவ்வொரு ஆண்டும் காவல் துறையில் காவலர் நிலையில் ஏற்படும் காலியிடங்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் இந்தச் சிறப்புக் காவல் இளைஞர் படையிலிருந்து தேர்ச்சி பெறும் நபர்களுக்கு ஒதுக்கப்படும்.

முற்பகல் 10–10

சீருடைப் பணியாளர் தேர்வாணையம் இதற்கென ஒவ்வொரு ஆண்டும் சிறப்புத் தேர்வினை நடத்தும். அத்தேர்வில் பங்கேற்று வெற்றி பெறுபவரின் பட்டியல் சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் வெளியிடப்படும். இத்தேர்வில் வெற்றி பெறாதவர்கள், 40 வயது வரை, இந்த தமிழ்நாடு சிறப்புக் காவலர் இளைஞர் படையிலேயே தொடர்ந்து பணியாற்றுவர். 40 வயதிற்கு மேல், அவர்களுக்கு தமிழக அரசே வேறு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 அக்டோபர் 29

இந்த நிதியாண்டில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைக்கென மாநிலம் முழுவதும் 10,000 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கான தேர்வுகள் வரும் டிசம்பர் மாதம் நடத்தப்படும். இந்தத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் இந்த நிதியாண்டிற்குள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். 2013–2014 ஆம் நிதியாண்டில் 15,000 பேர் இந்த இளைஞர் படைக்கென தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கேற்ப 50,000 உறுப்பினர்கள் வரை இந்தத் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் சேர்க்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 3. தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்குதல்–முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சு என்பதற்கு இலக்கணமாக வள்ளுவப் பெருந்தகை சொன்னார், மக்களின் உரிமைகளும், உடைமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்; அதற்கு காவல் அரணாக இருப்பதே அமைச்சு என்று சொன்னார். தமிழ் மண்ணில்–தமிழர்களின் உரிமைகளுக்கும், உடைமைகளுக்கும் அரணாக இருந்து கொண்டிருக்கிற, ஏன் தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட காவலர்களுக்கே காவல் தெய்வமாக இருந்துகொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஒரு நல்ல அறிவிப்பை விதி 110–ன்கீழ் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதை நாம் மனமார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே இரண்டு வகையிலே தமிழக மக்களுக்குப் பெருமை, நன்மை. ஒன்று, தமிழகத்திலே இருக்கின்ற படித்த, வேலையற்ற, எளிய குடும்பத்தைச் சேர்ந்த 10,000 இளைஞர்களுக்கு வேலை கிடைக்கப் போகிறது; ஒரு நல்ல கௌரவமான வேலை கிடைக்கப் போகின்றது.



2012 அக்டோபர் 29] [முனைவர் செ.கு. தமிழரசன்]

இன்னொன்று தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னுதாரணம் என்கிற வகையிலே காவல் துறையிலே ஒரு சிறப்புக் காவலர் இளைஞர் படையை உருவாக்குவதன்மூலம் இளைஞர்கள் திசை திருப்பப்படுவது, மனம் மாறுவது தடை செய்யப்படும். அப்படிப்பட்ட தடையை இந்த வாய்ப்பின்மூலம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். பொதுவாக, முதலமைச்சர் அவர்களே சாதாரண காவலர் இறந்துபோனால்கூட இரங்கல் தெரிவிப்பது என்பது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களைக் கவனித்துக் கொண்டிருக்கிற, தம் மக்களைக் கவனிக்க முடியாத அந்தக் காவலர்களை, அந்தக் காவலர்களின் உணர்வுகளை மதித்து, அவர்களைக் கவனிக்கிற ஒரு காவல் அரணாக விளங்கிக்கொண்டிருக்கிற தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இத்தகைய வேலைவாய்ப்பின்மூலம் தமிழக எதிர்கால இளைஞர்களை மிகச் சரியான பாதையிலே கொண்டு செல்கிறார்கள். இதை எளிய மக்களின் சார்பிலே வரவேற்று, வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இன்று விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டிருப்பது நல்ல செய்தி–தமிழகத்திலே 1,13,629 காவலர்கள் இருந்தபோதும், இந்த நவீன, வேகமான மக்களின் வாழ்க்கைச் சூழலுக்கும், அவர்களுக்குள் ஏற்படுகிற குற்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்கும் போதுமான அளவிற்குக் காவலர்களின் எண்ணிக்கையில் பற்றாக்குறை இருப்பதை உணர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை என்கின்ற அந்தப் படையை உருவாக்கியிருக்கிறார்கள். 18 முதல் 30 வயது வரை இருக்கின்ற இளைஞர்களை அந்தப் படையிலே இணைத்து, தகுதியான, நேர்மையான, கண்ணியமான சமூக அக்கறையுள்ள, சேவை மனப்பான்மையுள்ள ஒரு துறையிலே 10,000 இளைஞர்களை இந்த நிதியாண்டிலே பணி அமர்த்தி,

படிப்படியாக 50,000 இளைஞர்களுக்கு இந்த வேலைவாய்ப்பை, பயனுள்ள வகையிலே இந்தச் சேவைத் துறைக்கு, சீருடைப் பணியாளர் துறைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றவுள்ளார்கள். அன்னைத் தமிழகத்தில் வாழுகின்ற கோடிக்கணக்கான தமிழ்ச் சமூக மக்களுக்கான சட்டம்—ஒழுங்கு சீராகப் பாதுகாக்கப்பட்டு, மக்களுடைய சொத்து, மக்களுடைய எல்லா வகையான உரிமைகளையும் பாதுகாப்பதற்கு இந்தச் சிறப்புக் காவல் இளைஞர் படை துணை செய்யும். தமிழக அரசியல் வரலாற்றில், இந்திய அரசியல் வரலாற்றில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தச் சிறப்பு விதியின்கீழ் இந்தச் சிறப்புத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10—15

குறிப்பாக, யதார்த்த உண்மையை உணர்ந்து துறைதோறும் புரட்சிகளை, மாற்றத்தை, சீர்திருத்தத்தைச் செய்து வருகின்றவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு சமுதாய விழாக்கள், சமுதாய தலைவர்களுடைய குருபூஜை விழாக்கள் நடைபெறும் இடங்களிலே பாதுகாப்பிற்காக பெரும்பான்மையான காவலர்கள் குவிக்கப்படுவதினால், அன்றன்று அந்தப் பகுதியிலே நடைபெறுகின்ற குற்ற நிகழ்வுகளை அல்லது வழக்கமான காவல் பணிகளைச் சீர் செய்ய முடியாமல், பாதுகாக்க முடியாத யதார்த்த நிலையை உணர்ந்துதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையை காவல் துறையிலே உருவாக்கியிருக்கிறார்கள். இந்த மதிப்புமிக்க துறைக்கு இன்னும் சிறப்பு சேர்ப்பதற்காக இந்தப் படையை உருவாக்கி அந்தச் செய்தியைத் தந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலேயே ஒரு சிறப்பான அறிவிப்பை விதி 110—ன்கீழ் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், காவல் துறையைப்



பற்றி அதிகமாகத் தெரிந்து வைத்திருப்பவர் அவர்கள். உலகத்திலேயே முதன்முதலாக பெண் காவல் நிலையத்தை உருவாக்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு சிறப்பாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பதவியேற்ற காலம் முதல் அதைச் சிறப்பாக கவனிக்க வேண்டும், மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், 636 மக்களுக்கு ஒரு காவல் அதிகாரி என்று இருப்பதை உணர்ந்து, பணியிடங்களை நிரப்புவது மட்டுமின்றி, அதை எப்படிச் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று இளைஞர் காவல் படையை உருவாக்கி, அதுவும் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதை மனதில் வைத்து, ஒவ்வொரு வருடமும் 15,000 என்ற விகிதத்தில் 50,000 பேர் கொண்ட சிறப்புக் காவல் இளைஞர் படையை உருவாக்குவது என்பது நிச்சயமாக வரவேற்கக்கூடிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவல் துறையை மேன்மைப்படுத்த வேண்டும்; அப்படி மேன்மைப்படுத்தும்போதுதான் சட்டம்—ஒழுங்கு சிறப்பாக இருக்கும் என்று சொன்னாலும், தமிழகத்திலே காவல் துறை சிறப்பாகப் பணியாற்றி, அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிலே சட்டம்—ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

கடந்த ஆட்சிக் காலத்தில் சிலர் வெட்டி மாண்டுகொண்டிருந்த சூழ்நிலையிலே, அதைப் பார்த்துவிட்டுச் சென்ற நிகழ்வுகளையெல்லாம் நான் இங்கே நினைவுகூர விரும்புகிறேன். இதை எதற்காகச் சொல்கின்றேன் என்றால், காவல் அதிகாரி இறந்தவுடன் அவரது குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணம் அளிப்பதிலேயும் சரி—இன்று காலையிலே நீங்கள் பத்திரிகையை பார்த்திருப்பீர்கள்—(மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்மீது அக்கறைகொண்டு காவல் துறையினர் சிறப்பாகப் பணியாற்றினால்தான் மக்கள் சிறப்பாக வாழ முடியும்; 'தனியாக ஒரு பெண்மணி இரவு 12—00 மணிக்குச் சென்று வீடு திரும்பும்போதுதான், உண்மையான சுதந்திரம் கிடைத்தது' என்று மகாத்மா காந்தி சொன்னதுபோல, தமிழ்நாட்டிலும் அந்த நிகழ்வு நடக்க வேண்டும், அனைவரும் சிறப்பாகச் சென்று வீடு திரும்ப வேண்டும் என்ற எண்ணத்திலேயே காவல் துறைக்கு அவர்கள்

[திரு. ரா. சரத்குமார்] [2012 அக்டோபர் 29

அதிகமான சலுகைகள் அளித்து, காவலர்கள் நிச்சயமாக மக்களைப் பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும்போது, அவர்களுடைய பணியிடங்களை நிரப்புவதற்காக இளைஞர் காவல் படையை உருவாக்கியிருக்கிறார்கள். இதில் மிக அவசியமாகச் சொல்ல வேண்டியது என்னவென்றால், தேர்ந்தெடுக்கப்படாதவர்களை நாங்கள் பணியில் அமர்த்துவோம், 40 வயதுக்கு மேலே அவர்களைத் தகுந்த வேலையிலே அமர்த்துவோம் என்று சொல்வதையும் வரவேற்கிறோம் என்று கூறி, இந்த அறிவிப்பு சிறப்பானதொரு அறிவிப்பாகும்; அனைவரையும் ஊக்குவிக்கின்ற அறிவிப்பாகும் என்று கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற போக்குவரத்து நெரிசல், கூட்ட நெரிசல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டும், தமிழகத்திலே இருக்க வேண்டிய சதவீதத்தைவிட குறைவாக இருக்கக்கூடிய காவலர் எண்ணிக்கையை மனதிலேகொண்டு, காவலர் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தாலே, எந்தவிதத்திலேயும் போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடக் கூடாது; கூட்ட நெரிசல் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடக் கூடாது; சட்டம்—ஒழுங்கு சீர்குலைந்துவிடக்கூடாது என்ற அடிப்படையில் காவலர் படைக்கு உற்ற துணையாக விளங்கக்கூடிய வகையில், இப்பொழுது தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை என்ற அமைப்பை உருவாக்குவதற்கு விதி 110—ன்கீழ் இந்தச் சிறப்பு அறிவிப்பை வெளியிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை புதிய தமிழகம் கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறேன்.

*முற்பகல் 10—20*

பொதுவாக ஒரு நாட்டினுடைய ஆட்சியில், ஒரு அரசினுடைய செயல்பாட்டில் சட்டம்—ஒழுங்கைக் காப்பது என்பது ஒரு இன்றியமையாத பங்காக அமைகிறது. எனவே, சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்றுவதிலே மிக முக்கிய பங்காற்றக்கூடியவர்கள் காவல் துறையினராக இருக்கிறார்கள். ஆனால், அந்தக் காவல் துறையிலே பங்கு வகிக்கக்கூடியவர்கள் அனைவருக்குமே போதிய பயிற்சி அளிப்பது, இதற்குண்டான செலவினங்கள், கால அவகாசங்கள்



2012 அக்டோபர் 29] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

எல்லாவற்றையும் கணக்கிலே கொண்டு, அதேபோல ஒவ்வொரு நேரத்திலேயும் காவலர் பணியிடங்கள் காலியாகின்றபோது உடனடியாக அதற்குண்டான பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்படுகின்ற காலதாமதங்கள் ஆகிய அனைத்தையுமே கருத்திலே கொண்டு, வெயிட்டிங் லிஸ்ட் என்று சொல்லக்கூடிய அளவிற்கு, ஏற்கெனவே ஒரு சிறப்புக் காவல் இளைஞர் படையைத் தேர்ந்தெடுத்தால், அவ்வப்போது உருவாகக்கூடிய காலியிடங்களை அதிலேயிருந்து நிரப்பிக்கொண்டே இருப்பதற்குண்டான நல்லதொரு யுத்தியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இது பாராட்டக்கூடியது, போற்றக்கூடியது. இந்த அறிவிப்பை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்று விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காங்கிரஸ் கட்சியின் சார்பாக . . . (குறுக்கீடு) திரு. கோபிநாத் பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சட்டம்—ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய சீரிய சிந்தனையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110—ன்கீழ் அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்பு மிக அற்புதமானது என்று வாழ்த்துகின்றேன். நல்ல அரசு அமைவதற்கு சட்டம்—ஒழுங்கு மிகவும் இன்றியமையாதது என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய போக்குவரத்து நெருக்கடி, இரவிலே ஏற்படக்கூடிய அசம்பாவித சம்பவங்கள் இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு மிக முக்கியமானது காவல் துறை. இளைஞர் படை அமைப்பது— பத்தாயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, ஒரு சக்தியான, வலுவான காவல் துறையை அமைப்பதற்கான நல்ல திட்டத்தை இங்கு கொடுத்திருக்கிறார்கள். பத்தாயிரம் நபர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது அவர்களுக்கு 40 வயது வரை வாய்ப்புக் கொடுக்கிறார்கள். தேர்ச்சி பெறக்கூடியவர்களுக்கு காவல் துறையில் பிரமோஷன் கொடுக்கிறார்கள். இப்படி ஒரு நல்ல திட்டத்தை இந்த மண்ணுக்குக் கொடுத்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன்மூலம் சட்டம்—ஒழுங்கை நல்ல முறையில் நிலைநாட்ட முடியும் என்ற நம்பிக்கையோடு, விதி 110—ன்கீழ் அறிவிப்பு செய்திருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பு—பொதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கு காவல் துறையின் செயல்பாடு ஒன்றே இலக்கணமாகும் என்று கூறுவார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மற்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அவற்றைச் சரி செய்து நல்ல ஆட்சியை வழங்க வேண்டும் என்பதற்காகவும், அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காகவும் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை அமைப்பதை வரவேற்கின்றோம், வாழ்த்துகின்றோம். இதற்குண்டான தேர்வு வெளிப்படையாகவும், மக்களுக்குப் பயன் உள்ளதாகவும் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் தாங்கள் பேரவைத் தலைவராக வீற்றிருப்பதற்கு என் சார்பிலே வாழ்த்துகளை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—25*

இன்று சட்டமன்றம் கூடியிருக்கிற முதல் நாளில், தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை என்பது, தொலைநோக்குப் பார்வை கொண்ட சிறப்பான ஒரு திட்டம் என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

குறிப்பாக, இந்தச் சமுதாயத்தில் பல்வேறு துறைகள் இயங்கினாலும், அந்தந்தத் துறையினர் அந்தந்த நிலைகளில் மக்களுக்குச் சேவையாற்றுகிறார்கள். ஆனால், மாறிவருகிற சமூகச் சூழ்நிலையில் எல்லாத் துறைகளிலும் ஏற்படுகிற இடர்ப்பாடுகள் அல்லது குறைகளை, மக்களுக்குச் சமப்படுத்துகிற, சரிப்படுத்துகிற,



சட்டத்தின் ஆட்சியின்கீழ் பாதுகாப்பை உருவாக்கிக்கொடுக்கிற ஒரு மிகப் பெரும் பொறுப்பை காவல் துறை ஏற்றிருக்கிறது. காவல் துறையினுடைய பணி என்பது 24 மணி நேரத்தையும் தாண்டிச் சென்றுகொண்டிருக்கிற காரணத்தால், பல்வேறு குறைகள் ஏற்படுகிற நிலையில், இன்றைக்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவல் துறையைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்துவது மட்டுமல்ல; இந்தத் துறையின்மூலமாக சட்டத்தின் ஆட்சியைக்கொண்டு தமிழக மக்களைப் பாதுகாக்கிற ஒரு பெரும் நோக்கோடு, தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையை உருவாக்கியிருக்கிறார்கள்.

பொதுவாக போக்குவரத்து, நீதிமன்ற ஆணைகள் அல்லது நீதிமன்றத்தில் வழங்கப்படக்கூடிய எந்தவொரு ஆணையாக இருந்தாலும், அதைச் சார்வு செய்வது, விழாக்கள் பெருகி வரக்கூடிய நிலையில், நமது பண்பாட்டுத் தலங்களில் நடத்தக்கூடிய விழாக்கள், இவற்றுக்காக காவல் துறையில் இருக்கக்கூடிய காவலர்கள் பல மணி நேரங்களைச் செலவிடுகிற காரணத்தால், சட்டம்—ஒழுங்கு, பல்வேறு சிவில் பிரச்சினைகளில் மக்களுக்கு உதவுவதில் குறைபாடுகள் ஏற்படுவதை உணர்ந்து, இன்றைக்கு பத்தாம் வகுப்பு படித்த, பத்தாயிரம் இளைஞர்களை சிறப்புக் காவல் இளைஞர் படையின்மூலமாக நியமித்து, பொறுப்புள்ளவர்களாக, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது, நீதிமன்ற ஆணைகளை வழங்குவது, விழாக்களின்போது கூட்ட நெரிசல்களை ஒழுங்குபடுத்துவது என்ற அடிப்படையில், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதோடு, ஐம்பதாயிரம் இளைஞர்கள் வரை அந்தப் படையிலே சேர்க்கப்படுவார்கள் என்ற ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் காவல் துறைக்கு உதவியாக ஊர்க் காவல் படை என்று அமைக்கப்பட்டது. ஆனால், அவர்களுக்கு 700 ரூபாய், 800 ரூபாய் என்ற அளவிலேதான் ஊதியம் வழங்கப்பட்டது. ஆனால், இந்தச் சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினருக்கு எடுத்தவுடனேயே 7,500 ரூபாய் சம்பளம் வழங்கப்படுவது (மேசையைத் தட்டும் ஒலி) என்பது உண்மையிலே மகிழ்ச்சிகரமான செய்தி மட்டுமல்ல, அந்த இளைஞர்கள் உற்சாகத்தோடு, நல்ல சிந்தனையோடு இதிலே பயிற்சி பெறுவதற்கும், வேலை பார்ப்பதற்கும் ஊக்கமளிக்கும்.

அதோடுமட்டுமல்ல, காலியாகக்கூடிய, காவல் துறையிலே இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு, இதிலே பயிற்சி பெற்றவர்களை உடனடியாகத் தேர்வு எழுத வைத்து ஒரு குறிப்பிட்ட சதவீத காலிப் பணியிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கையையும் எடுத்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், தேர்விலே வெற்றி பெறாத 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு, அவர்களும் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்துவிடாமல் இருப்பதற்காக, அரசுத் துறையின் வேறு பணிகளில் அவர்களைப் பணியமர்த்துவதற்கான (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல தொலைநோக்குத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இது சமூகத்தில் வாழுகிற மக்களுக்கு மட்டுமல்ல, இதிலே சேருகிற அந்த இளைஞர்களுக்கும், தமிழர்களுக்கும், 58 வயது வரை வாழ்க்கையில் ஓர் உத்தரவாதத்தை ஏற்படுத்துகிற ஒரு சிறப்பான திட்டமாக, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நீண்ட தொலைநோக்குத் திட்டமாக அறிவித்திருப்பதை மனதார இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றம் இன்னதென்று ஆராய்ந்து, எந்தப் பக்கமும் சாயாமல், நடுநிலையுடன் செயல்படக்கூடிய நல்லாட்சி தமிழ்நாட்டிலே மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. காவல் துறை கம்பீரமாக நிற்பது மட்டுமின்றி, அனைத்துக் கோணங்களிலும் வளர்ச்சி பெறுவது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான்.

முதன்முதலில் 1991—இலே சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. காவலர்கள், சப்—இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் இந்த வாரியத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டனர். 1992—இல் முதன்முதலில் சிறப்புப் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டது, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான். 1992 ஆம் ஆண்டில் முதன்முதலாக மகளிர் காவல் நிலையம் தமிழக காவல் துறையிலே அமைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையிலுள்ள ஆயிரம் விளக்கு தொகுதியில்தான், அந்த மகளிர் காவல் நிலையம் துவக்கப்பட்டது.

இன்று மனித உரிமையைப் பற்றி உலகமே பேசினாலும், அதை முழுவதுமாக உணர்ந்தவர் புரட்சித் தலைவி அம்மா



அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முறையாக மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1993 ஆம் வருடம்தான் முதலில் மனித உரிமைக்கு என்று தனியாக காவல் துறையிலே ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது. பெண் காவல் அதிரடிப் படை 4—10—2003 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. பெண் காவல் அதிரடிப் படையினர் இன்று வன்முறையாளர்களை எதிர்கொள்ளுதலிலும், துப்பாக்கிச் சுடுதலிலும் ஆண் காவல் அதிரடிப் படையினருக்கு நிகராக விளங்குகின்றனர் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றைக்கு எடுத்த நடவடிக்கைகள்தான்.

*முற்பகல் 10—30*

இந்தியாவிலேயே முதன்முறையாக காவல் துறையினர் குறைந்த விலையில் பொருள்கள் பெறும்வகையில் பல்பொருள் அங்காடிகள், அதாவது, கேண்டீன்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காவல் துறையிலே பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்றைக்கு தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்கும் வகையில் அறிவிப்பு தந்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ள பாராட்டுக் கருத்துகளோடு என்னுடைய கருத்துகளையும் இணைத்து எனது நெஞ்சார்ந்த நன்றியை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

## 4. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் தேர்தலுக்கு 26—10—2012 ஆம் நாள் நண்பகல் 12—00 மணி வரை ஒரு நியமனத் தாள் மட்டுமே பேரவைச் செயலாளரால் பெறப்பட்டுள்ளது.

பேரவை விதி 7 (4)—ன்படி இப்பதவிக்கு நியமனம் பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை முதலில் நான் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| *நியமனம் செய்யப் பெற்றவர்* | : | திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* |
| *முன்மொழிந்தவர்* | : | மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* |
| *வழிமொழிந்தவர்* | : | மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். |

ஒரே உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பெற்றிருப்பதால் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தனது இருக்கையில் வந்து அமர்ந்தார்.)*

## 5. பேரவைத் துணைத் தலைவருக்குப் பாராட்டுரைகளும், நன்றியுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எளியோர்க்கு உரிமைக் குரலாய் ஒலிக்கும் அற்புதம், அண்டியவர்களுக்கு ஆல்போல் நிழல் கொடுக்கும் அன்புச் சரணாலயம், மனித சக்தி கடந்த மகா சக்தி எனத் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு மண்புமிகு பேரவைத் துணைத் தலைவராக மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்தச் செய்தியை அறிவிக்கின்ற வாய்ப்பைப் பெற்றதில் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களை இன்று முதல் இப்பேரவையில் எனக்குத் துணையாக தலைமையேற்று நடத்துவதற்கு நியமித்திருக்கிறார்கள். மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார். அமைதியானவர், அனைவரிடத்திலும் இனிமையாகப் பழகக்கூடியவர்; நட்பு பாராட்டுபவர். மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் இவ்வளவு காலமும் தனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை சீரோடும், சிறப்போடும், செம்மையாகவும், திறமையாகவும் செய்து அனைவருடைய பாராட்டுகளுக்கும் உரியவராகத் திகழ்ந்து வந்திருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, தற்போது பேரவையினால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, இப்பேரவையின் துணைத் தலைவர் பொறுப்பிலிருந்து இவர் பணியாற்றுவார் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவராலும் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிற அவரை என் சார்பிலும், பேரவை உறுப்பினர்கள் சார்பிலும் வாழ்த்தி அவருடைய பணிகள் மிக நல்ல முறையிலே தொடரும் என்கின்ற என் நம்பிக்கையை மீண்டும் தெரிவித்து, என்னுடைய வாழ்த்துகளை அவருக்குக் கூறி, மற்ற கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்ந்து வாழ்த்துரை வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

*முற்பகல் 10–35*

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவராக மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியதாகும். எந்தப் பொறுப்பை வகித்தாலும், அந்தப் பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றவர் என்ற காரணத்தினாலே, அவர் இன்றையதினம் இந்த அவையினுடைய துணைத் தலைவராகியிருக்கிறார். அவரும் ஒரு துணைத் தலைவர், நானும் ஒரு துணைத் தலைவர். அந்தவகையிலே துணைத் தலைவரைப் பாராட்டுவதில் எனக்குத் தனிச் சிறப்பு உண்டு என்று கருதுகிறேன்.

சட்டமன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபாடு காட்டி வருகின்ற அவருக்கு இந்தச் சட்டமன்றத்தை நடத்திச் செல்லுவது ஒன்றும் கடினமான காரியம் அல்ல. ஆகவே, எதிர்த்தரப்பிலே இருக்கின்ற நாங்கள் எப்போதும்போல அவரிடத்திலே வைக்கின்ற வேண்டுகோள் ஒன்றுதான். எங்களையும் நீங்கள் கடைக்கண்ணால் பார்த்து, எங்களுக்குரிய வாய்ப்பினை அளித்து நாங்கள் சொல்லுகின்ற கருத்துகளுக்குப் போதிய நேரத்தை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, உறுப்பினர்கள் பேசுகின்றபோது சில நேரங்களில் தவறான தகவல்களையோ அல்லது தடம் புரண்டு செல்கின்ற நிலைமையோ ஏற்படுமேயானாலும் அவற்றையெல்லாம் பொறுத்து அவர்களைச் சரியான பாதையிலே அழைத்துச் செல்லுகின்ற கடமை துணைத் தலைவருக்கு உண்டு. அந்தவகையிலே தட்டிக்கொடுத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஊக்கப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த பேரவையினுடைய அவை உரிமைக் குழுவின் தலைவராக இருக்கின்ற வாய்ப்பினையும் அவர்தான் பெற்றிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமைகளையும், அவர்களுடைய கண்ணியத்தையும் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பும் அவருக்கு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையிலே அவருக்கு முழு ஒத்துழைப்புத் தந்து, அவருடைய தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு இந்த மாமன்றம் பெருமையோடும், சிறப்போடும், வரலாற்றுப் புகழோடும் விளங்குவதற்கு உறுதுணையாக இருப்போம் என்று உறுதிகூறி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் இந்த அவையினுடைய துணைத் தலைவராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய பாராட்டுகளை, வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



சட்டப் பேரவையில் நீண்ட ஆண்டுக்கால வரலாற்றை, அனுபவத்தை நம்முடைய திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இதே அவையிலே அமைச்சராக இருந்து பணியாற்றியிருக்கிறார்; ஆளுங்கட்சி வரிசையிலிருந்து தன்னுடைய கடமையை நிறைவேற்றியிருக்கிறார். ஏன், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தும் தன்னுடைய உணர்வுகளையெல்லாம் இந்த அவையிலே அவர் பிரதிபலித்திருக்கிறார். எனவே, எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய உறுப்பினர்களுடைய உணர்வுகளை அவர் நன்றாகப் புரிந்துகொண்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய உள்ளத்தைத் தெளிவாக அறிந்து அதற்கேற்றவகையில் இந்த அவையை நிச்சயம் நடத்துவார் என்கிற நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு. எனவே, அந்த நம்பிக்கையோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அவரை மீண்டும் ஒருமுறை வாழ்த்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏகமனதாக தமிழகச் சட்டமன்றப் பேரவைக்கு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மரியாதைக்குரிய திரு. ஜெயராமன் அவர்களுக்கு வாழ்த்துகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகச் சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தையும், உரிமையையும் முன்னெடுத்துச் செல்லத்தக்கவகையில் அவர் கடந்த காலங்களில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தும் செயல்பட்டிருக்கின்றார், மாண்புமிகு அமைச்சராக இருந்தும் செயல்பட்டு இருக்கின்றார். பல்வேறு சட்டமன்ற, அரசியல் அனுபவங்களையும் பெற்ற அவர்கள் மிகவும் பேருதவியாக, துணைத் தலைவராக எதிர்காலத்தில் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது.

உலகமயத்தினுடைய கொள்கை, தனியார்மயம், தாராளமயம் இவை உலகத்தினுடைய பல நாடுகளைத் தாக்கிக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், இந்திய நாட்டினுடைய பொருளாதாரம், தமிழகத்தினுடைய

பொருளாதாரச் சூழ்நிலைகளில் ஏழையெளிய மக்கள், மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்கள் என சகலருடைய உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்து வைக்கும் கருத்துகளுக்கு அவர்கள் துணையாகவும், ஆதரவாகவும் இருப்பார்கள் என்ற முறையிலே துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை வாழ்த்துகளைச் சமர்ப்பித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

*முற்பகல் 10—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பேரவைக்கு துணைத் தலைவராக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டிருக்கிற மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், இளம் வயதிலிருந்து அரசியலில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். தமிழக அரசியலில் ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தில் மாணவர் பருவத்திலிருந்து அரசியலில் ஈடுபட்டு, ஜனநாயகத்திற்கான நெறிமுறைகளுக்காக மக்களுடன் போராட்டங்களை நடத்தி, அதன்மூலமாக சட்டமன்ற உறுப்பினராக நீண்டநெடிய காலமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, ஆளும் கட்சி உறுப்பினராகவும், எதிர்க்கட்சி உறுப்பினராகவும்கூட செயலாற்றி இருக்கிறார். கடந்தமுறை எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த நேரத்தில் இங்கே அவையிலே பேசுவதற்கு அவர் எப்படியெல்லாம் முயற்சி செய்தார் என்பது எங்களுக்குத் தெரியும். அத்தகைய முயற்சிகளை நாங்களும் இந்த நேரத்திலே செய்வோம் என்பதையும் அவர் கருத்திலே கொண்டு மக்களுடைய பிரச்சினைகளை பேசுவதற்கு எங்களுக்கு கூடுதலான வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும். நாங்கள் சொல்வதை குறை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.



நாங்கள் இருக்கிற நிலைமைகளைச் சுட்டிக்காட்டுகிறோம். அதற்குத் தீர்வான பதிலைச் சொல்வதன்மூலமாக தமிழக மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஆளுங்கட்சி ஏற்படுத்திட முடியும். எனவே, அந்த வகையில் நமது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எதிர்க்கட்சியின் பக்கம் கடைக்கண் அல்ல, எல்லாப் பார்வையையும் எங்கள் பக்கமே திருப்பி கூடுதலான வாய்ப்புகளை உருவாக்கித் தருவார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் ஒரு தனித்துவம் மிக்க துணைப் பேரவைத் தலைவராக எதிர்காலத்தில் சுட்டிக்காட்டுகிற அளவிற்கு அவருடைய செயல்பாடு இருக்க வேண்டுமென்று என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து, மீண்டும் என் சார்பிலேயும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலேயும் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று புதிதாக துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக வாழ்த்துகளைக் கூறுவதோடு, மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் திறமையான முறையிலே நீண்டகாலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் என்பது மாத்திரமல்ல, இங்கே முன்னாள் அமைச்சராகவும் செயல்பட்டு, எதிர்க்கட்சி உறுப்பினராகவும் செயல்பட்டு, திறமையான முறையிலே தனது பணியை ஆற்றியவர். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் ஆளுங்கட்சியில் உள்ள உறுப்பினர்களுக்கும் சமமான பங்களிப்பதன்மூலம் இந்தச் சபை நல்லமுறையிலே செயல்பட வேண்டும் என்ற ஜனநாயக முறையை கடைப்பிடித்து, இந்தச் சபையை நடத்திச் செல்வதற்கு வாய்ப்பாக அவரது நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க

இந்தப் பேரவையின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற, அதிலும் குறிப்பாக, போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்று சொன்னாலும், அவருக்கு மிகப் பெரிய பொறுப்பும் ஜனநாயகக் கடமையும் அதிகமாக இருக்கின்றன என்று நான் கருதுகின்றேன். ஆளுங்கட்சியிலிருந்தும், எதிர்க்கட்சியிலிருந்தும் அவர் பணியாற்றிய அந்தப் பாங்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எவ்வாறு எந்த வகையில் எல்லாம் துணைபுரிய வேண்டும், அவர்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்பதை நன்கு அறிந்தவர் என்ற வகையில், நாங்கள் எதிர்க்கட்சிதானே தவிர, எதிரிக் கட்சி அல்ல என்கின்றவகையில் நாட்டு நடப்புகளை அவைக்குத் தெரிவிக்கின்றவகையில் எங்களுக்கும் வாய்ப்புகளைத் தர வேண்டும். அவருடைய ஜனநாயகக் கடமையோடு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையின் மாண்பையும் காத்து, அவருடைய பணி சிறப்பாக அமைவதற்கு மீண்டும் மீண்டும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்புமிக்க பேரவையினுடைய துணைத் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய அன்புச் சகோதரர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கு புதிய தமிழகம் கட்சியின் சார்பாக முதற்கண் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமனைப் பொறுத்தமட்டிலும் எனக்கு ஏறக்குறைய 30 ஆண்டு காலத்திற்கு மேலாக அறிமுகமானவர். பொள்ளாச்சி என்று பெயர் சொன்னாலும்கூட, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை போன்ற அனைத்தும் ஒரு கட்டத்திலே கோவை மாவட்டத்திலே இணைந்திருந்த நேரத்தில் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஒரு குக்கிராமத்திலே



பிறந்தவன் நான். எனவே, அந்த அடிப்படையிலே அவரும் நானும் அருகருகிலே வாழ்ந்துகொண்டிருந்தவர்கள். அதுமட்டுமல்ல, குனியமுத்தூர் என்ற பகுதியிலே நான் இன்றும் குடியிருந்து வருகிறேன். அதுதான் என்னுடைய இருப்பிடம். அதே பகுதியிலே அவரது தொழிற்சாலைகளும், அவருடைய இருப்பிடமும் இருந்தன. எனவே அந்த அடிப்படையிலே நீண்ட நாட்களாக நாங்கள் எல்லாம் ஒருசேரப் பழகக்கூடிய வாய்ப்பினைப் பெற்றவர்கள். எதற்காகச் சொல்கின்றேன் என்றால், அவரைப் பொறுத்தமட்டிலும், அவர் எல்லா காலக்கட்டங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் இன்முகத்தோடு அனைவரிடத்திலும் பழகக்கூடிய மாண்பைப் பெற்றவர்.

எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில், போராட்டம் நடத்த வேண்டிய நேரத்தில், ஆட்சியிலே இல்லாத நேரத்தில், பதவியிலே இல்லாத எல்லா காலக்கட்டங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் ஒரே இலட்சியத்தோடு, குறிக்கோளோடு செயல்பட்டவர். எனவே, அப்படி நீண்ட நெடுங்காலமாக பழகிய ஒருவர் இந்த அவையினுடைய துணைத் தலைவராகப் பொறுப்பேற்றதிலே நான் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்; அதைப் பாராட்டுகிறேன். அவரிடத்திலே வைக்கக்கூடிய ஒரே ஒரு வேண்டுகோள் இன்று உலகெங்கும் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய அமைப்பு ஜனநாயகம். ஜனநாயகம் என்று சொல்லுகின்றபொழுது அதிலே மாற்றுக் கருத்துக்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். எனவே, அந்த வகையிலே இந்த மாமன்றத்திலே நாங்கள் எழுப்பக்கூடிய கருத்துகள், ஆளும் கட்சிக்கும் வலு சேர்க்கக்கூடிய கருத்துகள்தான். அவை ஜனநாயகத்தை வலுப்படுத்தக்கூடியவை என்ற அடிப்படையிலே எங்களுக்கு நீங்கள் உற்ற வகையிலே விளங்கிட வேண்டும் என்ற கருத்தை மட்டும் இந்த நேரத்திலே வலியுறுத்தி நீங்கள் இந்தப் பதவியிலே மிளிர வேண்டும், ஒளிர வேண்டும் என்று மீண்டும் வாழ்த்தி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைக்குரிய இந்த மாமன்றத்தில், தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினேழாவது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியோடும், இந்த மாமன்றத்தின் இசைவோடும்

ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களை வாழ்த்திப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் என் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி அருகே உள்ள திப்பம்பட்டியில் பிறந்த திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், 1995–1996 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகவும், பின்பு அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்கள். 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் உடுமலைப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக அவரைப் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

“நல்ல நல்ல நிலம் பார்த்து நாமும் விதை விதைக்கணும்
நாட்டு மக்கள் மனங்களிலே நாணயத்தை வளர்க்கணும்”

என்ற புரட்சித் தலைவருக்கு பெருமை சேர்த்த பாடலை எழுதிய திரைப்பட பாடலாசிரியர் உடுமலை நாராயண கவியைப்போல், தற்போது திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராக பொறுப்பேற்று இவ்வூருக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

சட்டமன்றக் கூட்டத் தொடர் நாட்களிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தனது அறைக்கு பணியின் காரணமாகச் சென்றிருக்கின்ற சமயங்களில் பேரவைத் தலைவர் அவர்கள் ஆசனத்தில் அமரும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு பேரவையை சிறப்பாக நடத்துவதற்கு அனைத்து உரிமைகளும் உண்டு. எனவே பேரவைத் தலைவரைப் போலவே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று எந்தப் பாகுபாடும் இல்லாமல், அனைவருக்கும் சம உரிமை அளித்து அவையை கண்ணியமாக நடத்திச் செல்வதோடு, சரியான நேரத்தில் நகைச்சுவையைப் பயன்படுத்தி அதையும் சுவையாகப் பயன்படுத்தி, கலகலப்போடு அவையை நடத்துமாறு அவரை நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே அமைச்சர் பொறுப்பு வகித்துள்ள மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களுக்கு இந்த அவையின் விதிகள் பற்றி நன்றாகத் தெரியும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்



இப்பேரவையில் சிறப்பாக பணியாற்ற சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் வாழ்த்தி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க நம்முடைய தமிழக சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற பாசமிகு அண்ணன் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கு முதற்கண் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்பிற்கும், சிரித்த முகத்திற்கும், ஓயாத உழைப்பிற்கும், ஏற்றுக் கொண்டிருக்கின்ற தலைமை மீதான விசுவாசத்திற்கும் வடிவமாகத் திகழ்கின்ற பாசமிகு அண்ணன், மூத்த நிருவாகி, மூத்த சட்டமன்ற உறுப்பினர், ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும், இல்லாதபோதும் மக்கள் பிரதிநிதியாக இருந்து, ஏற்றுக் கொண்டிருந்த பொறுப்புகளையெல்லாம் செவ்வனே நிறைவேற்றிய, சிறப்பாகச் செயலாற்றிய ஒரு தகுதிவாய்ந்த நிருவாகியை, தகுதிவாய்ந்த சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பு வகிக்கத் தேர்வு செய்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்புமிக்க இந்தப் பதவியும் நம்முடைய துணைத் தலைவராக இன்று பொறுப்பேற்றிருக்கின்ற திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் இந்த மாமன்றத்தில் எப்படி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் எதிர்பார்க்கின்றார்களோ, அந்த அளவைவிட கூடுதலாக இன்முகத்தோடும், மகிழ்வோடும் இந்தப் பேரவையை நடத்துவார்கள். எங்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்புகள் தந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கு அவரும் இயன்ற அளவிற்கு தன்னாலான கடமையைச் செய்வார் என்கின்ற நம்பிக்கையோடு இன்று பொறுப்பேற்றிருக்கின்ற சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

[2012 அக்டோபர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வையத்தில் வாழும் தமிழர் நெஞ்சங்களிலெல்லாம் வைரமாக மின்னிக் கொண்டிருக்கின்ற நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வைர விழா கொண்டாடிக் கொண்டிருக்கின்ற நம்முடைய சட்டமன்றத்தில், ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரை பேரவைத் தலைவராக்கி தமிழக சட்டமன்ற வரலாற்றில் வைரம் பதித்திருக்கின்றார். இன்று அதற்குத் துணை நிற்கின்ற வகையில் ஆழ்ந்த அனுபவமும், ஆற்றலும், அமைதியும் மிக்க மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களை பேரவைத் துணைத் தலைவருக்கான வேட்பாளராக அறிமுகப்படுத்தி, ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வித்திட்டிருக்கின்றார். எப்பொழுதுமே அழகுக்கே அழகு சேர்க்கின்ற பேரழகுப் பெட்டகமாக, பிறப்பிடமாய் விளங்கக் கூடியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு அப்படியொரு அணி சேர்க்கின்ற வகையில் பேரவைத் துணைத் தலைவராக, அமைதியும், அனுபவமும், ஆற்றலும் மிக்க திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களை முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

அமைதியும், ஆற்றலும், அனுபவமும் பொது வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஆகும். இந்த மூன்றும் நிறைந்திருக்கின்றவரிடத்திலே அதிகாரம் தரப்படும் பொழுதுதான் அந்த அதிகாரமே மதிப்பு பெறுகின்றது. அந்த வகையிலே எப்போதுமே ஒரு தலைமைக்குத் தகுதி வாய்ந்த சிறப்பு என்பது சிறந்த துணைவர்களை தளபதிகளாக உருவாக்குவது. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகச் சிறந்த தலைமைச் சான்று மிக்கவர், அந்த தலைமைச் சான்றுக்கு உறுதி மிக்கவர் என்பதற்கு இது ஒரு இலக்கணம். எப்பொழுதுமே தங்கள் தளபதிகளை மிகச் சீரிய தளபதிகளாகத் தேர்ந்தெடுக்கின்ற அனுபவம் அவருக்கு இருக்கின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தப் பேரவையிலே துணைத் தலைவராக விளங்கிய திரு. யு. கிருஷ்ணா ராவ் அவர்கள், புலவர் கா. கோவிந்தன் அவர்கள்,



2012 அக்டோபர் 29][முனைவர் செ.கு. தமிழரசன்]

வழக்கறிஞர் திரு. பி.எச். பாண்டியன், தாங்கள் உள்ளிட்ட பலர் துணைத் தலைவராக இருந்து தலைவராகவே வருகின்ற வாய்ப்பு பெற்ற நீண்ட வரலாறு இந்த அவைக்கு இருக்கிறது. ஆகவே, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களும் வருங்காலத்தில் மேலும் பல பதவிகளைப் பெறுவதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளை நான் இங்கே உரித்தாக்குகின்றேன். அவர் மிகச் சிறந்த வகையிலே இந்த அவையை நடத்துவார்.

திரு. ஜெயராமன் என்கின்ற பெயர் எனக்கு மிக மிகப் பிடித்த பெயர். ஏன், தமிழர்களுக்கே பிடித்த பெயர். தமிழர்களின் விடிவெள்ளியாக இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தந்தையார் பெயர் திரு. ஜெயராமன் என்பதை இங்கே நினைவுபடுத்தி, *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படிப்பட்ட பெயருக்கே சிறப்பு படைத்த திரு. ஜெயராமன் அவர்களை நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*முற்பகல் 10–55*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்”

என்ற குறளுக்கு இலக்கணமாய், நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் வல்லமை கொண்டு தமிழக மக்களுக்கான நலத் திட்டங்களை நிறைவேற்றி, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உருவாக்கிட அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* முதற்கண் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ ராமரின் கால்பட்டு கல்லாக இருந்த அகலிகை பெண்ணாக மாறியதுபோல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைபட்டு அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தப் பெருமைக்குரிய மன்றத்திலே

பேரவைத் தலைவராக அமர்ந்திருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் வரலாற்றினை உருவாக்கியவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்தப் பெருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வரலாற்றுச் சிறப்பும், பெருமையும் மிக்க இந்தப் பேரவையை சிறப்புடன் நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு பேரவைத் துணைத் தலைவராக தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை உயிரெனக் கொண்டு குலதெய்வமாய் வணங்கிடும் 1½ கோடி தொண்டர்களையும் தமது செல்லப் பிள்ளைகளாய் தாயன்பு காட்டி, எளிய தொண்டனுக்கும் பெருமை சேர்க்கும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பில்லாத ஒரு பெரும் தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரான தங்களுக்கு பக்கபலமாய் இருந்து பணியாற்றிட பேரவைத் துணைத் தலைவரைத் தேர்வு செய்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உயர்வு பெற்ற சிலர் நன்றி மறந்து பேசிக்கொண்டிருக்கும்பொழுது, மனசாட்சியுள்ள சிலர் மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளை மனம் திறந்து பாராட்டிக்கொண்டிருக்கும் இந்த நல்ல நேரத்தில் நீங்கள் பேரவைத் துணைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறீர்கள்.

சட்டமன்றத்தின் மாண்புகளையும், மரபுகளையும், அதன் விதிகளையும் நெறிகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் மிக நன்றாக அறிந்தவர் ஆவார்கள். கடந்த 10–10–2012 அன்று நமது சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்றபோது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களைப் பாராட்டி பேசிய உரை இதனைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டும். தலைவர் பொறுப்பிலே அமர்ந்து இந்தப் பேரவையை நடத்துபவர் எப்படி நடுநிலைமையுடன் நடத்திச் செல்ல வேண்டும்; எவ்வாறு பேரவை உறுப்பினர்களின் உரிமைகளைக் காத்திட வேண்டும்; எப்படி



கனிவோடும், அதேநேரத்தில் கண்டிப்போடும் செயல்பட வேண்டும் என்பதையெல்லாம் எடுத்துக்கூறுகின்ற ஒரு manual – வழிகாட்டி நூலாக மாண்புமிகு அம்மா அவர்கள் அன்று ஆற்றிய உரை அமைந்திருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

சட்டமன்றப் பேரவையில் நல்ல அனுபவம் மிக்க மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அந்தக் கருத்துகளை ஏற்று பேரவையின் ஜனநாயக மரபுகளையும், விதிமுறைகளையும் காப்பாற்றுவதில் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு உற்ற துணையாக விளங்கிட வேண்டும் என்ற எனது விருப்பத்தினை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

நீங்கள் சட்டமன்றப் பேரவையின் மாண்புமிகு துணைத் தலைவராக கடமையுணர்வுடன் பணியாற்றி, பாராட்டுகள் பல பெற்றிட வேண்டும் என்ற எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடுமலைப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து முதுகலைப் பட்டம், இளம் ஆய்வு முனைவர் பட்டம் ஆகியவற்றைப் பெற்றவர். ஆரம்பக் காலம்தொட்டு தன்னை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக்கொண்டவர். கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். சகோதரர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களைப் பொறுத்தவரையில், தொடக்கத்திலிருந்தே அவர் பொது வாழ்விலே ஈடுபட்ட நாள் முதல், கொண்ட கொள்கையில் பிடிப்புடன் இருப்பவர். தனக்கிட்ட பணியைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர்.

*முற்பகல் 11–00*

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் கதர் கிராமத் தொழில் வாரிய உறுப்பினராக நீண்டநாள் பணியாற்றியவர். தமிழ்நாடு துணி நூல் கழகத்தின் தலைவராக பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு. 2001 ஆம் ஆண்டு முதன்முறையாக பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மாமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக திறம்பட பணியாற்றியிருக்கிறார். தொழில் துறை அமைச்சராகவும், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு. 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் பொள்ளாச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புடன் பணியாற்றியவர். 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புடன் பணியாற்றி வருகிறார். ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றியதோடு மட்டுமல்லாமல், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு. எனவே, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் மனநிலை அவருக்கு நன்கு தெரியும். இதன் காரணமாக நடுநிலைமை என்பது அவருடன் ஒன்றிப்போய் இருக்கும். எனவே, பேரவை துணைத் தலைவர் பதவிக்கு அவர் மிகவும் பொருத்தமானவர். திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் அனைவரிடமும் அன்புடன் பழகும் தன்மை கொண்டவர். கட்சிப் பணிகள் மட்டுமின்றி மக்கள் நலப் பணிகளையும் சிறப்புடன் ஆற்றும் திறமை கொண்டவர். ஏழை எளிய மக்களுக்கு உதவும் பாங்கினைக் கொண்டவர். இந்த மாமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களில் பங்கு கொண்டு தனது தனித் தன்மையை வெளிப்படுத்தியவர் சகோதரர் ஜெயராமன் அவர்கள். இந்தப் பேரவையின் துணைத் தலைவராக இருப்பதற்குத் தேவையான குணங்களையும், பண்புகளையும் ஒருங்கே பெற்றவர். திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் நல்லவர், வல்லவர், படித்தவர், நல்ல அடக்க உணர்வுடன் எந்தப் பொருளையும் கூர்ந்து கவனித்து முடிவு எடுக்கும் தன்மை படைத்தவர். பேரவைத் தலைவருக்குத் துணையாக மட்டுமல்லாமல் இணையாகவும் செயல்படக் கூடியவர்.



அனைத்து உறுப்பினர்களுடைய நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று, பேரவைத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக திறம்படப் பணியாற்றுவார் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவருக்கு முழு ஒத்துழைப்பினை நல்குவார்கள் என்ற எனது நம்பிக்கையைத் தெரிவித்து மீண்டும் ஒரு முறை அவருக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் உரித்தாக்கிக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்புரை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் ஜனநாயகத்தில் அதிக நம்பிக்கையுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, பாரம்பரியமிக்க, பெருமைமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவைக் கொண்டாட இருக்கும் மங்களகரமான வேளையில் பொள்ளாச்சிக்கும், உடுமலைப்பேட்டைக்கும் இடையே அமைந்துள்ள திப்பம்பட்டி என்னும் குக்கிராமத்தில், சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எளிய தொண்டனான என்னை ஐந்து முறை கழகத்தின் மாவட்டச் செயலாளராகவும், புரட்சிப் பேரியக்கமான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற இந்த மாபெரும் மக்கள் இயக்கத்தின் தேர்தல் பிரிவுச் செயலாளராகவும், மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகவும், வாரியத் தலைவராகவும், அமைச்சராகவும் பணியாற்றிட நல்வாய்ப்பளித்து தற்பொழுது சட்டமன்றப் பேரவையின் துணைத் தலைவராகப் பணியாற்றுகிற வாய்ப்பினைத் தந்த வள்ளல் பெருந்தகை, எனக்கும் என் குடும்பத்திற்கும், தாய்த் தமிழ்நாட்டிற்கும், உலகம் முழுவதும் வாழும் அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் தாயாய், தந்தையாய், ஆசானாய், அருள்புரியும் தெய்வமாய் விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்பின் சிகரம், ஆற்றலின் உறைவிடம், அனுதினமும் நான் வணங்குகிற எங்கள் குடும்ப குல தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி

கோடானுகோடி நன்றியினை அவருடைய மலர்ப் பாதங்களிலே உரித்தாக்குகிறேன். என் உயிர் மூச்சு உள்ளவரை உங்கள் வழி தொடரும் உண்மையான தொண்டனாக, விசுவாசியாக இருப்பேன் என்று சத்தியப்பூர்வமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மைத் தொண்டனாகிய என்னை சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராக போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

பெருமை வாய்ந்த இந்த அவையின் மாண்பையும், மரபையும், பெருமையையும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கற்றுக்கொடுத்த பாதையிலே என்னுடைய செயல்பாடுகளை அமைத்து, அவையின் பெருமைக்கு சற்றும் களங்கம் ஏற்படாதவகையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய செயல்பாடுகளுக்கு துணை நின்று, பொறுப்புணர்வோடும், கடமையுணர்வோடும் பணியாற்றுவேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் வாழ்க்கையின் ஒளிவிளக்கு, புண்ணியத்தாய், வாழும் வள்ளல் பெருந்தகை மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வை இல்லையென்றால் என்போன்ற கோடானுகோடி தொண்டர்களுக்கு வாழ்க்கையே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆம் தாயே, கடைக்கோடி தொண்டனும் தங்களுடைய உயரிய சிந்தனையாலும், உறக்கம் அறியா உழைப்பாலும் உயர்ந்து இருக்கிறான். இறைவனின் வரம்கூட வானுலகிலிருந்து வந்துசேர சில நாட்கள் ஆகும். இதய தெய்வத்தின் வரம் மட்டுமே நித்தம், நித்தம் தமிழ்நாட்டு மக்களின் வீட்டு வாசல் தேடி வந்து நிற்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாபெரும் வெற்றி என்பது ஒரே நாளில் படைக்கின்ற அற்புதம் அல்ல. இது சிறு, சிறு வெற்றிகளின் கூட்டுத் தொகை. தாயே, நீங்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்த தாரக மந்திரம் இது. ஆம் தாயே, வஞ்சகர்களின் சூழ்ச்சியை வென்றெடுத்து,



வறண்டு கிடந்த தமிழகத்தை மழைநீர் சேகரிப்பால் வளர்ச்சியாக்கி, அன்னிய சக்திகளைவிட கொடிய தீய சக்திகளால் சுரண்டப்பட்டு காலியான கஜானாவை உங்களது அன்னமிட்ட கரங்களால் அமுதசுரபியாக்கி, ஓராண்டுச் சாதனைகளை நூறாண்டு பேசும்வண்ணம் சரித்திரமாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) உண்மை, உழைப்பு, உயர்வு என நீங்கள் ஏறிவந்த படிக்கட்டுகள் நிகழ்த்திக்காட்டியிருப்பது சாகாவரம் பெற்ற சரித்திர உண்மைகள்.

எல்லா தாய்மார்களும் பிறக்கும் குழந்தையின் அழுகுரல் கேட்டு மகிழ்வர். ஆனால் நீங்கள் மட்டும்தான் தாயே குழந்தை பிறக்கும்போதே சிரித்துக்கொண்டே பிறக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) சிந்தித்து, கருவறையில் தொடங்கி வாழ்நாள் முழுவதும் நிம்மதியாய் வாழ்ந்திட வளர்ச்சித் திட்டங்களை வாரி, வாரி வழங்கி வருகிறீர்கள் அம்மா.

தமிழ் மண்ணின் பெருமையைத் தரணி எங்கும் பரப்பியதால் உங்கள் பாத மலர்கள் பாராளுமன்றத்தில் படவேண்டுமென்று பாரத மணி மகுடம் உங்களுக்காக ஏங்கி நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் தொடங்கிய தமிழ்த் தாயின் தலைமை இந்திய நாட்டை ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அரியணையை அலங்கரிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. உலக வரலாற்றின் வரைபடத்தில் இனி ஒளிரப்போவது உங்கள் ஆட்சியின் அத்தியாயங்கள் மட்டும்தான் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி) ஆம் தாயே, தமிழ்நாட்டுக்கு நீங்கள் தந்த திட்டங்கள் மற்ற மாநிலங்களின் வெற்றிக்கு வித்திட்டன. உலக நாடுகளே உங்கள் திட்டங்களைக் கண்டு வியந்து நிற்கிறது என்பதற்கு உங்கள் நல்லரசை உலக வல்லரசே வந்து வாழ்த்தியதே சான்று தாயே. (மேசையைத் தட்டும் ஒலி) நடுநிலை வகிப்பவர்கள் அரசியல் பேசக்கூடாது என்ற மாண்பை, கண்ணியத்தை எங்கள் தாய் எங்களுக்குக் கற்றுக்கொடுத்துள்ளதால் அன்றாட நிகழ்வை மட்டும் அவையிலே பதிய வைக்கிறேன். அரசியலை வியாபாரமாக்கியவர்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசில் காணாமல் போய்விட்டனர். விளம்பரத்தில்கூட அவர்களை நாங்கள் காண முடியவில்லை. ஆனால் வலைவீசி தேடப்படுவோர் பட்டியலில் வரிசையாய் நிற்கின்றனர்.

தமிழ் அகராதியில் முதல் எழுத்து, தமிழ்நாட்டின் தனி எழுத்து, காவியத்தாய் தந்த கலைமகளே, காவிரித் தாயைக் காக்க வந்த குலவிளக்கே, ஏழை மக்களின் ஒளிவிளக்கே, கலங்கி நின்ற

தமிழகத்தை காக்க வந்த கலங்கரை விளக்கே, கழகக் குடும்பங்களின் காவல் தெய்வமே, கிராம வளர்ச்சியைக் கணினியில் தந்தவரே, பசுமை வீடு தந்த பாரி வள்ளலே, உலகத் தரத்தில் உன்னத ஆட்சி தரும் உத்தமத் தாயே, அச்சம் என்பதை துச்சமாய் எண்ணும் அன்புத் தாயே, நாளைய நாடாளுமன்றத்தின் நம்பிக்கை நட்சத்திரமே, வணங்குகிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

கடமையைக் கருவாக்கி, கண்ணியத்தை உருவாக்கி, கட்டுப்பாட்டை இலக்காக்கி, அன்பை அறமாக்கி, ஆற்றலை நெருப்பாக்கி, உழைப்பை உரமாக்கி, விழும்போதெல்லாம் விதையாகி, எழும்போதெல்லாம் ஏணியாகி, புரட்சிகரமான திட்டங்களுடன் பாரதப் பயணத்தை துவங்கியுள்ள எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் பாதையில் முட்கள்கூட முல்லைப் பூவாகிறது. எங்கள் தங்கத் தலைவி ஆளும் காலங்களில் நானும் இந்த அவையில் இதய தெய்வம் அம்மா அவர்களின் தலைமையின்கீழ் பணியாற்றுகிறேன் என்பதே எனது முன்னோர்களுக்கும், எனக்கும், எனது சந்ததியினருக்கும் கிடைத்த பிறவிப் பயனாகும்.

இறைவா, உன்னிடம் ஒரு வரம் கேட்கிறேன். என் வாழ்நாளில் கடைசி நொடிப் பொழுதும் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் இடும் கட்டளையை நிறைவேற்றும் தொண்டனாகவும், எனது உதடுகளுக்கும், நாவிற்கும் அசையும் சக்தி உள்ளவரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்க, அம்மா வாழ்க என்கிற திருவாசகத்தை உச்சரிப்பதாகவும் இருக்க வேண்டும். உலகெலாம் அம்மா அவர்களின் புகழ் பரவ வேண்டும் என்று இறைவனை வேண்டி என் தாயின் பொற்பாத மலர்களில் எனது சார்பிலும், எனது குடும்பத்தின் சார்பிலும், உடுமலைப்பேட்டை தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

தாயே உங்கள் இலட்சியம் உயர்வானது; தாயே உங்கள் பார்வை தெளிவானது; தாயே உங்கள் வெற்றி முடிவானது; இன்றும் நமதே, நாளையும் நமதே, நாற்பதும் நமதே, நாடாளுமன்றமும் நமதே, நாளைய உலகம் நமதே என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் நன்றி கூறி அன்புத் தாயின் பாத மலர்களில் என் நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



*முற்பகல் 11–10*

## 6. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)—ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்கள் பேரவையின் 5—வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) ஆக நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

## 7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2012–2013, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012—2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பும், பெருமையும்மிக்க இந்த மாமன்றத்தில் இந்த ஆண்டின் முதல் துணை நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும் நல்வாய்ப்பை எனக்கு நல்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு மாபெரும் இயக்கத்தின் தலைவர் மட்டுமல்ல, அவர் ஒரு வரலாறு. மாண்புமிகு அம்மா அவர்களின்

வாழ்க்கையே ஒரு வீர வரலாறு. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் படைத்து வருவது ஒரு வெற்றி வரலாறு. ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இன்றைய திராவிட இயக்கத்தின் வரலாறு. *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்படி, வரலாறாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தின் 60 ஆண்டுகள் நிறைவினை வைர விழாவாகக் கொண்டாடுகிற புதிய வரலாற்றையும் படைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வரலாறு, வரலாறு படைக்கின்ற சிறப்பைக் கண்டு, தமிழகமே பெருமையில் திளைத்துக்கொண்டிருக்கின்றது. இந்த வரலாறு புரியாதவர்களையும், இந்த வரலாற்றை மாற்ற நினைப்பவர்களையும் பார்த்து தமிழகமே சிரித்துக் கொண்டிருக்கின்றது.

சில அரசியல் கோழைகள் வீராதி வீரர்கள்போல நடித்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டில், தமிழர்களின் உரிமைகளைக் காக்க தடந்தோள் கொண்டு போரிடும் வீரத்தின் விளைநிலம் எங்கள் அம்மா அவர்கள்.

தமிழர் நலன் காக்க, தடைக் கற்களைத் தகர்த்து தூள் தூளாக்கும் தீரத்தின் இருப்பிடம் எங்கள் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

உலகத் தமிழர்களின் நலன் காத்து, வளம் காத்து, குலம் காத்து, அவர்தம் உரிமைகளைக் காத்து நிற்கும் உலகத் தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவர் எங்கள் அம்மா.

தமிழர்களை வீழ்த்த எண்ணும் மாய சக்திகளை மருண்டோட வைக்கும் மக்கள் சக்தி எங்கள் அம்மா.

தமிழகத்தைக் கெடுக்கும் தீய சக்திகளை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்துகின்ற வெற்றித் தலைவி எங்கள் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழகம் இழந்த பெருமைகளை மீட்டெடுத்து, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கிட, புதுமைத் திட்டங்களை தினமும் படைக்கும் அறிவின் ஊற்று எங்கள் அம்மா.



‘எல்லா பாதைகளும் ரோமாபுரியை நோக்கி’ என்று சொல்வதுபோல, ‘எல்லாரது பார்வைகளும் தமிழ்நாட்டை நோக்கி’ என்ற சாதனையைப் படைத்தவர் எங்கள் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)* தங்களது குடும்பங்களைப் பற்றியும், தங்களது குதூகலத்தைப் பற்றியும் மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பவர்களுக்கு மத்தியிலே தமிழ்நாட்டின் நலன் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பவர் எங்கள் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மனக் குழப்பத்தில் சிலர்; மற்ற குழப்பங்களில் சிலர்; இவர்களுக்கு மத்தியிலே எந்தக் குழப்பமும் இல்லாமல் நல்லாட்சி நடத்திக் கொண்டிருப்பவர் எங்கள் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

வெறும் அறிக்கைகளில் மட்டுமே வீரத்தைக் காட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு மத்தியிலே, யாருடைய மிரட்டலுக்கும் பணியாமல் பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர் எங்கள் அம்மா.

ஒன்றல்ல, இரண்டல்ல, தமிழக மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்துள்ள திட்டங்கள் எண்ணிக்கையில் அடங்காது, எடுத்துச்சொல்ல நேரமும் போதாது.

தமிழகத்தின் பசிப்பிணியை அறவே அகற்ற, மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி, ‘அன்னமிட்ட கை’ என்று தாய்மார்கள் மகிழ்ச்சியோடு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசுப் பணிபுரியும் மகளிர் மனம் மகிழ, பேறுகால விடுப்பு ஆறு மாதங்களாக உயர்வு, அந்தக் கர்ப்பிணிப் பெண்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணை உள்ளத்தைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நலிந்த மக்கள் முகங்களில் நிரந்தரப் புன்னகை மிளிர, ஓய்வூதியத் தொகை ஆயிரம் ரூபாயாக உயர்வு. மாண்புமிகு அம்மா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை, பயனடைந்தவர்களெல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–15

ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு 4 கிராம் தங்கத்துடன், நிதியுதவி 25,000 ரூபாய். அவர்கள் பட்டம் அல்லது பட்டயம் பெற்றிருந்தால் திருமண நிதியுதவி 50,000 ரூபாயுடன் தாலிக்கு 4 கிராம் தங்கம். தங்க மனசு கொண்ட தாய் என்று தமிழ்நாடே பாராட்டிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை மீனவர்கள் மனம் மகிழ மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை 4,000 ரூபாயாக உயர்வு. எங்கள் இல்லங்களிலெல்லாம் விளக்கேற்றிய தாயே என்று மாண்புமிகு அம்மா அவர்களை மீனவச் சமுதாயமே புகழ்ந்து கொண்டிருக்கிறது.

பச்சிளம் தாய்மார்கள் வலிவும், பொலிவும் பெற மகப்பேறு நிதியுதவி ரூ.12,000/–. தாயோடு சேய்நலம் காக்கும் மனிதநேயச் சிகரம் என்று தாய்மார்கள் மகிழ்ச்சியோடு மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரோக்கியமான தமிழகம் காண முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம். இதுதான் உண்மையான காப்பீட்டுத் திட்டம் என்று உலகமே போற்றிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை என்றென்றும் தெரிவிக்கும்வகையில் போடிநாயக்கனூரில் புதிய அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, தருமபுரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மேலும் இரண்டு அரசுப் பொறியியல் கல்லூரிகள், இதுவன்றி மேலும் 10 பாலிடெக்னிக்குகள், 2 கால்நடை மருத்துவக் கல்லூரிகள், உயர் கல்வியை ஊக்குவிக்க 22 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள். அறிவுச் செல்வங்களை ஊக்குவிக்கும் கல்வித் தாய் என்று மாண்புமிகு அம்மா அவர்களை அறிவுலகம் பாராட்டிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவ, மாணவியருக்கு விலையில்லா சீருடைகள், காலணிகள், புத்தகப் பை, வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, பூகோள வரைபடம், பாடப் புத்தகங்கள்,



நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா சைக்கிள்கள், விலையில்லா மடிக் கணினிகள். தமிழகத்தில் கல்விப் புரட்சி ஏற்பட இதைவிட என்ன வேண்டும்? குழந்தைகளைப் பெறுவது மட்டும்தான் பிள்ளைகளின் அம்மா. அவர்களை வளர்த்து, படிக்க வைத்து, ஆளாக்குவது எல்லாம் நம் இதய தெய்வம் அம்மா என்று (மேசையைத் தட்டும் ஒலி) நாடே பாராட்டிக்கொண்டிருக்கிறது.

கடந்த 17 மாதங்களில் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணி நியமனங்கள். வேலையற்றோரின் வேதனையைத் தீர்த்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்று இளைய சமுதாயம் பாராட்டிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை மக்களுக்கு, சுற்றுச்சூழல் மாசுபடாமல் சூரிய மின்சக்தியுடன்கூடிய தலா ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான ஆண்டுதோறும் 60,000 பசுமை வீடுகள். ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு இலட்சம் வீடுகள். கண்ணீரைத் துடைக்கின்ற கருணை வள்ளல் என்று பாதிக்கப்பட்டவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அனைத்துத் துறைகளிலும் தமிழகம் சிறந்து வளர்ச்சியினை அடைய ‘தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023’.

திருக்கோயில்களில் பக்தர்கள் மனம் மகிழ, இறைவனை வழிபடும் பக்தர்களின் வயிறு குளிர அன்னதானத் திட்டம். ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம்.

மாதம் 70 ரூபாய் என்று குறைந்த கட்டணத்தில் 100 சேனல்களைக் கண்டுகளிக்கும் 58 இலட்சம் சந்தாதாரர்களைக் கொண்ட அரசு கேபிள் டி.வி. சூரிய சக்தியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்ய “தமிழ்நாடு சூரிய சக்திக் கொள்கை”.

காவலர் மற்றும் தீயணைப்புப் படையினருக்குச் சொந்தமாக வீடு வழங்கும் ‘உங்கள் சொந்த இல்லம் திட்டம்’. சட்டப் பேரவையின் 60 ஆண்டுகள் நிறைவினையொட்டி 1 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் வைர விழா நினைவு வளைவு.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 அக்டோபர் 29

ஸ்ரீரங்கம் தொகுதியில் இதுவரை மொத்தம் 590 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகள். ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர் குட்டப்பட்டி கிராமத்தில் தேசிய சட்டப் பள்ளி.

தாய் திட்டத்தின்கீழ் 120 குக்கிராமங்களில் 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 390 குடிநீர் வசதி மற்றும் சாலைப் பணிகள். 7 கிராம ஊராட்சிகளில் 54 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சூரிய ஒளி மின் சக்தியுடன்கூடிய 100 தெரு விளக்குகள்.

3 கோடியே 4 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மற்றும் மேம்பாலங்கள்.

பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 619 வீடுகள். ரூ.24 கோடி மதிப்பீட்டில் புதை வடிகால் வசதி. வனத் துறையின் சார்பில் 8 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வண்ணத்துப் பூச்சி பூங்கா.

அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் 1 கோடியே 33 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய அன்னதானக் கூடம். 3 கோடியே 58 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திருவாணைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் கோயில் மேம்பாடு என எண்ணற்ற பணிகளை ஸ்ரீரங்கம் தொகுதி மக்களின் நல்வாழ்வுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இப்படி தமிழகம் முழுவதும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தினம் தினம் செயல்படுத்தும் திட்டங்களைச் சொல்லச் சொல்ல நா இனிக்கும். சொல்லும்போதே இதயம் இனிக்கும். ஆனால், திட்டங்களை ஆராய்ந்து அறிவிப்பதோடு மட்டுமல்லாமல் அதை செயல்படுத்துவதில்தான் திட்டங்களின் வெற்றி இருக்கிறது என்பதை உணர்ந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

மாண்புமிகு அம்மா அவர்கள் தீட்டிய அத்தனை திட்டங்களையும் சொல்ல நேரம் இல்லாத காரணத்தால் ஒரு சிலவற்றை மட்டும் சொல்லியிருக்கிறேன். திட்டங்களும் தொடரும், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியும் தொடரும்.



2012 அக்டோபர் 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தமிழகத்தைப் போலவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி, மத்தியிலும் அமைந்திட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தைப் போலவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி, மத்தியிலும் அமைந்திட வேண்டுமென்று தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்திய மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் நிச்சயம் நிறைவேறும். அதுவும் கூடிய விரைவில் நிறைவேறும், நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2012–2013 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன் வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் 2012 மார்ச் திங்கள் 26 ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு, நிருவாக நலன் கருதியும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும் பல புதுப் பணி மற்றும் புது துணைப் பணி திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதுப் பணி மற்றும் புதுத் துணைப் பணிகளுக்கு சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதற்கும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்யவும், இந்தத் துணை மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

இப்பேரவையின் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 5,617.14 கோடி நிதியை கூடுதலாக ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் ரூபாய் 3,801.70 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூபாய் 1,815.44 கோடி மூலதன மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும். இம்மதிப்பீடுகளில் உள்ள கூடுதல் செலவினங்கள் மாநில வரி வருவாயின் வளர்ச்சியின் மூலமாகவும், குறிப்பாக வணிக வரிகள் மற்றும் மாநில ஆயத் தீர்வைகள் மூலமாகவும், செலவினங்களை சிறப்பாகக் கண்காணித்து கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் ஈடு செய்யப்படும். இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள சில திட்டங்களைப் பற்றி நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அதன் நிதி மேலாண்மையை மேம்படுத்த உதவும் பொருட்டு,

@ 84 முதல் 89 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

இந்த நிதியாண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக ரூபாய் 1,000 கோடி வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கி அனுமதித்துள்ளது. மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைக்கிணங்க, 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட உதவி மானியங்களுடன் கூடுதலாகத் தேவைப்படும் ரூபாய் 1,086.25 கோடியையும் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின்கீழ் இப்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசின் பொருட்டு, இந்த ஆண்டு வழங்க வேண்டிய ரூபாய் 2,000 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை “மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை” என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

2012–2013 ஆம் ஆண்டில் ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் நபார்டு வங்கி கடனுதவியுடன் பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ரூபாய் 235 கோடியை அனுமதித்துள்ளது. மேலும், ரூபாய் 275.68 கோடி செலவில், சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சாலைகள், பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் ஒவ்வொரு இனத்தின் கீழும் தலா ரூபாய் 1,000 “மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்தில் ரூபாய் 18.10 கோடி செலவினத்தில் தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கும், ரூபாய் 68.17 கோடி செலவில் பொன்னேரி மற்றும் நாகப்பட்டினத்தில் மீன் வள தொழில்நுட்ப நிறுவனத்தை நிறுவுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிறுவனங்களை நிறுவுவதற்கு நடப்பு நிதியாண்டிற்கான நிதி ஒப்பளிப்பாக முறையே ரூபாய் 8 கோடி மற்றும் ரூபாய் 14 கோடி இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.



முற்பகல் 11–25

தெரிவு செய்யப்பட்ட 31 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 42 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையத்தை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ரூபாய் 19.44 கோடி அனுமதித்துள்ளது. இது தவிர, சிவகாசி அரசு மருத்துவமனையில் உள்ள தீக்காயப் பிரிவை சிறப்பு மையமாக மேம்படுத்துவதற்கு ரூபாய் 4.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இவற்றுள், கட்டுமானச் செலவினங்களுக்காக ரூபாய் 2.25 கோடி போக, நிகரத் தொகை “மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக துணை மதிப்பீடுகளில் ஒவ்வொரு இனத்தின்கீழும் ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சார்ந்த நமது தீரமிக்க தீயணைப்பு வீரர்களுக்கு 1,980 ஜோடி தற்பாதுகாப்புச் சாதனங்கள் வாங்கி வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ரூபாய் 28 கோடி ஒப்பளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் நடப்பாண்டு செலவினங்களுக்காக ரூபாய் 8 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரகத்திற்கு ரூபாய் 5.99 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிருவாக ஒப்புதலை அளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

நீர் வழிகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காக, சென்னையில் நீர் வழிகளில் கழிவுநீர் கலக்கும் இடங்களில் உரிய பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ரூபாய் 150 கோடி அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில்

ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

புதுக்கோட்டை நகராட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களையொட்டி, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூபாய் 50 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ், ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டிற்கான இந்த முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கம்.

**2012–2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 மாநிலச் சட்டமன்றம் | 1 | – | – |
| 2 ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 1 | – | – |
| 3 நீதி நிருவாகம் | 20,10 | – | – |
| 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 13,17,62 | – | – |
| 5 வேளாண்மைத் துறை | 876,47,24 | 82,80 | – |
| 6 கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 11,96,51 | 1 | – |
| 7 மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 22,96,28 | 2 | – |
| 8 பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 2 | – | – |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 1,48,90 | 2 | – |
| 10 வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 5,49,03 | – | – |
| 11 முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 3 | – | – |
| 12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 1 | – | – |
| 13 உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 14,03 | 1 | – |
| 14 எரிசக்தித் துறை | 2,042,54,00 | – | 1,000,00,01 |
| 16 நிதித் துறை | 11,42,08 | – | 10,00,00 |
| 17 கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 197,57,00 | – | 6,23,00 |

| | | | |
|---|---|---|---|
| 18 கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | – | – | 10,00,00 |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 26 | 2 | – |
| 20 உயர் கல்வித் துறை | 5 | 30,00 | – |
| 21 நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 2 | 24 | – |
| 22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 4,10,65 | 1 | – |
| 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 13,96,60 | 1 | – |
| 24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3,05,79 | – | – |
| 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5 | – | – |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 1,01,81 | – | 36,48,00 |
| 27 தொழில் துறை | 39,74 | 1 | 353,08,00 |



| | | | |
|---|---|---|---|
| 28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 19,02,40 | 90,00 | – |
| 29 சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 15,97 | 1,00,02 | – |
| 30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | – | 6,50,00 | – |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1 | – | – |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 8,62,76 | 4 | – |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 2,23,78 | 373,36,02 | – |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 2,94,28 | – | – |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 6 | – | – |
| 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,00,00 | – | – |
| 38 பொதுத் துறை | 7,05 | – | – |
| 39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 1,50,24 | 1,33,19 | – |

| | | | |
|---|---|---|---|
| 40 பாசனம் (பொதுப் பணித் துறை) | 6 | 32 | – |
| 41 வருவாய்த் துறை | 8,33,09 | 1 | – |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 152,89,71 | 3 | – |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 13 | 3 | – |
| 44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 9 | 3 | – |
| 45 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 127,24,67 | – | – |
| 46 தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 2,01,52 | – | 1 |
| 47 இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 1 | – | – |
| 48 போக்குவரத்துத் துறை | 200,00,01 | 1 | 13,91,00 |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 3,88,02 | – | – |
| 50 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 2 | – | – |
| 51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 23,97,80 | – | – |



| | | | |
|---|---|---|---|
| 52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 6 | – | – |
| 54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1,26,51 | 2 | – |
| **பெருமொத்தம்** | 3,761,16,09 | 384,22,87 | 1,429,70,02 |

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) 30–10–2012 அன்று பேரவைக் கூட்டம் இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (29–10–2012) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, நாளை (30–10–2012) செவ்வாய்க்கிழமை அன்று பேரவைக் கூட்டம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 31–10–2012 (புதன்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. (i) 1–12–1982 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II, பிரிவு–1–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் இந்து அறநிலையத் துறையின் II(1)/வ.வ.அ.நி/294/82 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து அதற்குப் பதிலாக, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் அனுப்புகை நிறுவனம் ஆகிய நிறுவனங்களாலும் மற்றும் அந்நிறுவனங்களின் கிளைகளாலும் தமிழ்நாடு மாநிலத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) யாதொரு வணிகர் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு

[2012 அக்டோபர் 29

மின்சக்தி உற்பத்தியிலும், அனுப்புகையிலும் மற்றும் பகிர்மானத்திலும் பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் அனுப்புகை நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் நீங்கலான ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்தும்; மற்றும் (iii) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் அனுப்புகை நிறுவனம் ஆகிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர்களால் ஆயத்த திட்டப் பணிகளை மேற்கொள்வதில் பயன்படுத்துவதற்கான யாதொரு பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 20–3–2012 ஆம் நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. (i) 1–4–2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் பாகம்–II, பிரிவு–1–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/11(b–5)/2008 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாக, யாதொரு வணிகர் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் கொள்முதல்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) 23–3–2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் பாகம்–II, பிரிவு–1–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/30 (a–3)/2007–ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், கோதுமை, 'ஓட்ஸ்' தானியம், பால்புட்டிகள் மற்றும் பால்புட்டிச் சூப்பான்கள் மற்றும் தலைக் கவசம் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; மற்றும் (iv) யாதொரு வணிகர், சேனிடரி டவல்கள், சேனிடரி நேப்கின்கள், பெல்ட் இல்லாத நேப்கின்கள், குழந்தைகளுக்கான நேப்பிகள் மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் டயாப்பர்கள் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு(பி1)த் துறையின் 27–3–2012–ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில்



2012 அக்டோபர் 29]

வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் 4–ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கருவிகளுடன் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 27–3–2012 ஆம் நாளிட்ட 50 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கருவிகளையும் சேர்ப்பது குறித்து. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 31–10–2011 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(8)த் துறையின் 12–12–2011 ஆம் நாளிட்ட 61 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(6)த் துறையின் 3–1–2012 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய–மாநில ஆலோசனைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தம் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து வரப்பெற்ற

[2012 அக்டோபர் 29

*2–9–2011 ஆம் நாளிட்ட எண்.த.மி.ஒ.ஆ./மா.ஆ.கு.ஒ/2–29–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*8. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(8)த் துறையின் 30–3–2012 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*9. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/2012), 15–6–2012 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நிதி (பொது மாநில கழகம்) துறையின் 14–6–2012 ஆம் நாளிட்ட 211–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/2012) 35(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*10. தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், 15–6–2012 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நிதி (பொது மாநில கழகம்) துறையின் 14–6–2012 ஆம் நாளிட்ட 212 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/2012) 35(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*1. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2012)*

*2. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2012)*

*3. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2012)*



2012 அக்டோபர் 29]

*4. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2012)*

*5. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2012)*

*6. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/2012)*

*7. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/2012)*

*8. 2012 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/2012)*

*9. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/2012)*

*10. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 14/2012)*

*11. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 15/2012)*

*12. 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/2012)*

*13. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 17/2012)*

*14. 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகர செயற்பாடு நீட்டிப்பு) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 18/2012)*

********